# மாவட்டசபைகளில் சிறுபான்மைதமிழர் அங்கம்வகிப்பர்


Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 134
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சேர ஆனி 12 ரபிஉல் 28 செவ்வாய்க்கிழமை (25-6-68)


## அமிர்தலிங்கம் தகவல்

உடுவில், திங்கள் "மாவட்டசபைகளில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும், பார்லிமெண்ட் அங்கத்தவர்களும் கடமையாற்றுவார்கள். அப்படியான சந்தர்ப்பங்களில் சிறுபான்மைத் தமிழர்களின் பிரதிநிதிகள் இடம் பெறுது போகக்கூடும். ஏனெனில் அவர்களில் வெகு சிலர் தான் இன்று உள்ளூராட்சி மன்றத் தலைவராக இருக்கின்றனர். நானறிந்தவரை இதுவரை அப்படி ஒருவரே இருக்கின்றார். அவர்கள் மாவட்டசபைகளில் இடம்பெற இன்று மலைநாட்டுத்தமிழருக்கு வழங்கப்பட்டிருப்பது போல நியமனப் பிரதிநிதித்துவம் வழங்கப்படும். இதற்காகவே நியமனப் பிரதிநிதித்துவச் சட்டம் மாவட்டசபைகளில் புகுத்தப்பட்டுள்ளது" என வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் சுன்னாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் மாவட்டசபை பற்றி பேசுகையில் கூறினார்.

சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே திரு. அமிர்தலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# "பலாத்கார ஆலயப்பிரவேசம் அவசியமில்லை"

## சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணித் தலைவர்

யாழ்ப்பாணம், செவ். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சம்பந்தமான ஆலயப்பிரவேச முயற்சியில் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவர்கள் எவரும் கலந்துகொள்ள மாட்டார்களாம்.

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த திரு. எம். சி. சுப்பிரமணியம் நேற்றுத் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நேற்று முன்தினம் எடுத்துக்கொண்ட இறுதி முயற்சி தோல்வியடைந்த போதும் இதுபற்றி இம்மாதம் 30-ந் திகதி சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் அரசாங்க அதிபருடன் கலந்தாலோசிப்பார்கள். பொலிஸ் சுப்பிரிண்டனுடனும் தாம் இதுபற்றிக் கலந்தாலோசிக்க இருப்பதாக திரு. எம். சி சுப்பிரமணியம் மேலும் தெரிவித்தார்.

இதுபற்றி இவர் மேலும் தெரிவிக்கையில் அரசாங்க அதிபர், பொலிஸ் சுப்பிரிண்டன் ஆகியோருடனும் சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்புச்சட்டம்பற்றி பிரதமருடனும் ஐக்கிய முன்னணி பேட்டி கண்ட பின்னரே ஆலயப்பிரவேசம்பற்றிய இறுதி முயற்சிகளை தாம் மேற்கொள்வரென்றும். ஆனால் எந்தவிதமான பலாத்கார முயற்சிகளையும் ஆலயப் பிரவேசத்தில் தாங்கள் மேற்கொள்ளப்போவதில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமரைச் சந்தித்த பின்னரே இதுபற்றி முடிவெடுக்கவிருப்பதாகவும் அவர் சொன்னார். (கா. நி.)

பாவனைப் பொருள் கட்டுப்பாட்டுச்சட்டம்

## வீடுகளைச் சோதனையிட அனுமதிபெறவேண்டும்

யாழ்ப்பாணம். செவ். வடபகுதி கட்டுப்படுத்தப்பட்ட பிரதேச பொருள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள எந்தக் கடையையும் சுங்கப்பகுதியினரும், பொலிசாரும் உணவுக் கட்டுப்பாட்டு இலாகா வழியாகவும் சோதனையிடலாம், ஆனால் வீடுகளைச் சோதனையிட உத்தரவுபெற்ற அதிகாரியான வடபகுதி அரசாங்க அதிபரின் 'வாரண்ட்' இன்றி செல்லமுடியாது.

இவ்வாறு யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரியான திரு. எம். வீரசிங்கம் தெரிவித்தார்.

இக்கட்டுப்பாட்டுச் சட்டம் இம்மாதம் 22-ந் திகதியிலிருந்து வடபகுதியிலுள்ள கோவளம் முனையிலிருந்து சுண்டிக்குளம் வரையுள்ள 5 மைல் உள்பட்ட பிரதேசத்துக்கு நடைமுறைக்கு வந்துள்ளது.

இக் கட்டுப்படுத்தப்பட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட பொருட்களை கூடுதலாக வைத்திருக்க இதுவரை சுமார் 360 பேர் விண்ணப்பித்துள்ளனர். இவ்விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம் செயலகத்தில் அதற்கென அமைக்கப்பட்ட இலாகா மூலம் அவ்வப்பகுதி காரியாதிகாரிகளுக்கு பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இக்கட்டுப்பாட்டுச் சோதனைபற்றி திரு. எம். வீரசிங்கம் மேலும் தெரிவிக்கையில், குறிப்பிட்ட பிரதேசத்திலுள்ள கடை, வீடு ஆகியனவற்றில் பர்மிட் இன்றி கூடுதலான கட்டுப்பாட்டுப்பொருள் வைத்திருப்பவர்களை பொலிசாரோ, சுங்க உணவுக்கட்டுப்பாட்டு இலாகாவினரோ, கைது செய்து தாங்கள் இலாகாவினரிடம் ஒப்படைக்கவேண்டுமென்றும், அரசாங்க அதிபரின் உத்தரவுக்கிணங்கவே அவர்கள்மீது சுங்கப்பகுதியினர் வழக்குத் தாக்கல் செய்ய முடியுமென்றும் குறிப்பிட்டார். (கா. நி)

## வடக்கு, கிழக்கில் டட்லி வெற்றி பெறுவார்

### வவனியா எம். பி. கூறுகிறார்

வவனியா, திங்கள் 'பிரதமர் திரு. டட்லி சேனநாயகா வடக்கு மாகாணத்திலோ கிழக்கு மாகாணத்திலோ தேர்தலில் போட்டியிட்டால் அவர் கண்டிப்பாக போட்டியின்றி வெற்றி பெறுவார். திரு. டட்லி இப்பகுதிகளின் விவசாயத்துறை வளர்ச்சிக்குப் பெரிதும் ஊக்கமளித்துள்ளார்.'

இவ்வாறு வவனியாவில் முதலாவது புதிய சந்தையைத் திறந்து வைத்துப் பேசிய வவுனியா எம். பி. திரு டி. சிவசிதம்பரம் கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் பேசுகையில் கூறியதாவது;

வடபகுதியில் [illegible] சியமாக வவுனியா மாறி[illegible]

(5ம் பக்கம் பார்க்க)

## வில்லூன்றி விநாயகராலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகராலய புதிய ராஜகோபுர மகாகும்பாபிஷேகம் வரும் வியாழக்கிழமை 9 மணியளவில் நடைபெறவிருக்கிறது. அன்று மூலமூர்த்தி உற்சவ மூர்த்திகளுக்கு விசேஷ தீபாராதனையும் பின் விநாயகர் பெருமான் எழுந்தருளி கோபுரத்துடன் அடியார்களுக்கு [illegible] நடைபெறும்.

## "அழிந்து போகும் மாவட்டசபைக்கு ஏன்பாடுபடவேண்டும்?"

### சாவகச்சேரியில் ஜி. ஜி.

யாழ்ப்பாணம், திங்கள் "மாவட்டசபைகள் நிறுவப்பட்டால் தென்னிலங்கையில் வாழும் 15 லட்சம் தமிழ்பேசும் மக்களும் படிப்படியாகச் சிங்களவராகிவிடுவார்கள். தற்பொழுது அங்கு வேலைபார்க்கும் ஆயிரக்கணக்கான தமிழ்மக்களும் வேலையிழக்கவேண்டிய நிலையேற்படும். அவர்களின் பிள்ளைகள் வருங்காலத்தில் கட்டாயமாகச் சிங்களம் படிக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்."

சாவகச்சேரி சந்தை மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்த தமிழ்க்காங்கிரஸ் பிரசாரக்கூட்டத்தில் 'மாவட்டசபை மசோதா' பற்றிப் பேசிய திரு. ஜி. ஜி பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

பாரிஸ்டர் எம். சிவானந்தன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. ஜி ஜி. பொன்னம்பலம் மேலும் கூறியதாவது: "1958ம் ஆண்டுக் கலவரத்தின்போது, கப்பலேறி இங்கு வந்த ஆயிரக்கணக்கான தமிழ்க் குடும்பங்கள் ஆறுமாத காலத்திற்குள் மீண்டும் தென்னிலங்கைக்குச் சென்றன. வடக்கு, கிழக்கு மாகாணங்களை நம்பி வாழமுடியாதென்ற காரணத்தினால் தான் அவர்கள் மீண்டும் தென்னிலங்கை சென்றனர். இன்றும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் தென்னிலங்கையில் தான் உத்தியோகம் பார்க்கின்றார்கள். இவர்களின் சம்பளத்தை நம்பித்தான் இங்கு எத்தனையோ குடும்பங்கள் உயிர்வாழ்கின்றன.

மாவட்டசபைகள் நிறுவப்பட்டால் 20 மாவட்டங்களிலுமுள்ள 15 லட்சம் தமிழ்பேசும் மக்கள் தங்கள் அலுவல்களைச் சிங்களத்தில் செய்யவேண்டியநிலை ஏற்படும். அப்படியானால் இவர்களின் பிள்ளைகள் சிங்களம் படிக்கவேண்டியநிலை ஏற்படும்.

மாவட்டசபைகளில் 10 லட்சம் இந்தியத் தமிழர்களுக்கும், 4 லட்சம் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் இடம் கிடையாது. கூடுதலான மாவட்டசபைகளில் முஸ்லிம்களுக்கு இடம் கிடைக்காது.

மாவட்ட சபைகளுக்கான அங்கத்தவர்கள் நேரடித் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்படமாட்டார்கள். இதன் மூலம் மக்களின் நேரடித் தொடர்பு துண்டிக்கப்படுகிறது.

நாடு முழுவதிலுமுள்ள 22 மாவட்டசபைகளின் பதிவுகள் கட்டாயமாகத்

[5-ம் பக்கம் பார்க்க]

## 'பரீட்சைமுறை முழுவதையும் புனரமைப்பு செய்யவேண்டும்'

### மகாஜனா கல்லூரி அதிபர் கூறுகிறார்

குரும்பசிட்டி, திங்கள் கடந்த டிசம்பரில் நடந்த கல்விப் பொதுத் தராதரத் தேர்வுகளில் [சாதாரணம்-உயர்தரம்] சித்தியடைந்தவர்களின் விதம் மிகவும் குறைவாகவே இருக்கின்றது. இது எமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது சோதனை நடத்துகின்ற முறை முழுவதையும் புனரமைப்பு செய்யவேண்டுமென்ற தேவையையே இது எமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. இதனால் ஆயிரக்கணக்கான பாடசாலைப் பிள்ளைகள் தவிக்கும் நிலைக்குவருகின்றனர். பெற்றோர்கள் மனச்சோர்வு அடைகின்றனர். இவைகளை நாம் இலகுவில் தட்டிக்கழிக்கமுடியாது. இதற்குப் பாடசாலைகளிலே குற்றத்தைச் சுமத்திவிடுவதும் இன்றைய கல்வித்தரம் பயங்கரமான நிலைக்கு வீழ்ந்துவிட்டதெனக் கூறுவதும் மிகவும் வசதியாக இருக்கும். இதனால் எமக்கு எவ்வித நன்மையும் ஏற்படாது."

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழாவின்போது தமது கல்லூரி வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு. ரி பி. ஜெயரத்தினம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் தமது அறிக்கையில் கூறியதாவது.

"இன்று எங்கள் பிள்ளைகளை எதிர்நோக்கியுள்ள திக்கற்ற நிலைக்குத் தீர்க்கமான முடிவு காணவேண்டும் என்பதே நாட்டின் தேவை. இத்தச் சிக்கலுக்குரிய காரணங்களையும் நிலைகளையும் நன்கு ஆராய்ந்து நோய்க்குப் பரிகாரம் தேடவேண்டும். எனவே, பெற்றோர்களையும், ஆசிரியர்களையும், பாடசாலை அதிபர்களையும், கல்விமான்

[5 ம் பக்கம்பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### கல்வி

ஆங்கிலத்தில் வல்லமையுள்ள ஆசிரியர்/இளைரிக்; உடனடியாக விஞ்ஞான பட்டதாரிகள்; நூலகரியர் ஒருவருக்கு உதவிசெய்ய; ஆங்கிலப் பட்டதாரிகள்; ஆங்கில இலக்கியமும்; பாடத்திட்டப் புத்தக வகுப்புகளும், ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) 1968 நடக்கின்றன.
E. றெடர் பி.லிற், இல. 2 பருளாய் வீதி, சுழிபுரம்.
1383

### தேவை

சாப்பாட்டு ஹோட்டலுக்கு சமையல் ஆளும் சப்ளையரும் தேவை. நேரில் வரவும். கொழும்பு ஹோட்டல், பருத்தித்துறை வீதி, காங்கேசன்துறை. 1885

## விளையாட்டுத்திடல் போதிக்கும்பாடம்

சுழிபுரம், திங்கள்

"ஒழுங்கையும், விட்டுக்கொடுக்கும் மனவலிமையையும் கற்பதற்கு விளையாட்டுத் திடலே ஏற்ற இடமாகும். வருங்காலச் செல்வங்களான மாணவ, மாணவிகள் வெற்றி தோல்விகள் மூலம் விஷயங்களை எடைபோடாமல் தாம் எடுத்துக்கொண்ட காரியம் திறம்பட நிறைவேற்றுவதில் யோதிய கவனம் செலுத்தி நற்பிரஜைகளாக வாழவேண்டும். எவ்வித வேறுபாடும் காட்டாது எல்லோரும் ஒன்றாக வழிகாட்டுவதும் விளையாட்டுக்களே' இவ்வாறு வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த இல்லங்களின் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடபகுதி உதவி பொலிஸ் அதிபர் திரு. வி. சி. டிக்மன் குறிப்பிட்டார்.

கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் தலைமை வகித்தார். அதிபர் தமது தலைமையுரையில் பேசுகையில், மாணவர்கள் தங்கள் வாழ்க்கையில் கற்க வேண்டிய பாடங்கள் நிறையவுண்டு என்றும் குறிப்பிட்டார்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திரு. வி. ரி. டிக்மன் பரிசில்களை வழங்கினார். மஞ்சள் இல்லம் முதலாவது இடத்தைப் பெற்றது.

## காயமடைந்தவர் மரணம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

சில தினங்களுக்கு முன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் இம்மாதம் 14-ம் தேதி அனுமதிக்கப்பட்ட பருத்தித்துறையைச் சேர்ந்த அர்ச்சுனராசா (வயது 35) நேற்றுமுன்தினம் மரணமானார்.

பருத்தித்துறை பதில் நீதிபதி விசாரணை நடத்தி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இறந்தவர் மரண வாக்குமூலத்தில், நேசராசா, சோதி, கார்த்திகேசு ஆகியோர் இரும்புக்கம்பியால் தலையில் அடித்ததாகத் தெரிவித்துள்ளார்.

### 35 வருட சேவை

சுழிபுரம், திங்கள்

முப்பத்தைந்து வருட ஆசிரிய சேவைக்கு பின்னர் திரு. கே. சுந்தரர் இளைப்பாறியுள்ளார். இவர் அராலி இந்துக் கல்லூரியில் கடமையாற்றி வந்ததுடன் ஆசிரிய சங்கங்களில் முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.

## விவசாய மன்னனுக்குபரிசு

சுழிபுரம், திங்கள்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப்போட்டி நேற்றையதினம் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றபோது அங்கு நின்ற சகலரும் அதிசயிக்கத்தக்க முறையில் விநோத உடைப்போட்டி நடைபெற்றது. விநோத உடைப்போட்டியில் பிரேத ஊர்வலங்கள், நடமாடும் கள்ளுக் கொட்டில், புது மணத்தம்பதிகள் ஊர்வலம் விவசாய மன்னன் ஊர்வலம் இன்னும் பல விநோத உடைகள் தரித்தவர்கள் போட்டியில் கலந்துகொண்டனர். விவசாய மன்னன் பவனி வரும் காட்சியை சித்தரித்த குழுவினருக்கு பரிசு கிடைத்தது.

## தீவிபத்து

### 2 குழந்தைகளும் தாயும் ஆஸ்பத்திரியில்

புலோலி, திங்கள்

மந்திகை அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றும் உடையார் முத்து என்பவருக்குச் சொந்தமான வீடு தீப்பற்றிக் கொண்டதால் தரைமட்டமாகியது. இப்பயங்கர தீவிபத்தில் உடையார் முத்துவின் மனைவியும் இரு குழந்தைகளும் எரிகாயங்களுக்கு இலக்காகி மந்திகை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

## "சைவ உண்மைகளை அறிய வெளி நாடுகளில் ஆவல்"

பண்டத்தரிப்பு, திங்கள்

"சைவத்தை வளர்க்க ஆவன செய்யுங்கள், ஆனால் எச்சமயத்தையும் தூற்றாதீர்" என இளவாலை மெய்கண்டான் வித்தியாசாலையில் சைவப் புலவர் சங்க ஆதரவில் உரையாற்றுகையில் கவியோகி சுத்தானந்த பாரதியார் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் தமது உலக சுற்றுப் பிரயாணத்தின்போது வெளி நாடுகளில் மக்கள் சைவ உண்மைகளையும் நெறிகளையும் அறிய எவ்வளவு ஆவலாயிருக்கிறார்கள் என்பதை தம்மால் அறியமுடிந்தது என்றார்.

சித்திரமேழிசந்தியிலிருந்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக மெய்கண்டான் வித்தியாசாலைக்கு கவியோகி அழைத்துச் செல்லப்பட்டார். மத வேறுபாடின்றிப் பெருந்தொகையான மக்கள் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சைவப்புலவர் திரு. செல்லையா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி உட்படப் பலர் பேசினர்.

## கொம்பனித் தெரு மக்கள் அதிருப்தி

கொம்பனித்தெரு, திங்கள்

கொம்பனித்தெருப் பகுதியில் பல ஆயிரக்கணக்கான தமிழ்மக்கள் வாழ்ந்து வருகின்றனர் எனினும்இப்பகுதி மக்களின் தேவையை முன்னிட்டு ஒரு தமிழ் சமாதான நீதிபதி இதுவரையும் நியமிக்கப்படாதது குறித்து இம்மக்கள் பெரிதும் அதிருப்தியடைந்துள்ளனர்.

## நெல்லியடியில் திருட்டுக்கள்

உடுப்பிட்டி, திங்கள்

நெல்லியடியில் கடந்த சில தினங்களாகப் பல இடங்களிலும் துணிகரத் திருட்டுக்கள் நடைபெற்றுள்ளன.

சென்ற சில தினங்களுக்கு முன் இரவு நேரத்தில் நெல்லியடிச் சந்தியிலுள்ள ரேடியோ திருத்தும் கடை ஒன்றின் ஓடுகளைக் கழட்டி உள்ளே புகுந்த திருடர்கள் சுமார் 200 ரூபா பெறுமதி வாய்ந்த வானொலி உதிரிப் பாகங்களைக் களவாடிச் சென்றுள்ளனர். பருத்தித்துறைப் பொலிசார் இரு தினங்களாக கடையைக் காவல் புரிந்ததோடு கை ரேகை அடையாளங்களையும் பதிவு செய்துள்ளனர்.

சென்ற திங்கட்கிழமை இரவு நெல்லியடியைச் சேர்ந்த கபிலன் நடேசர் என்பவரின் வீட்டினுள் புகுந்த திருடர்கள் 46 ரூபா பெறுமதியான குழந்தைகளைக் குளிப்பாட்டும் வாளி யொன்றைத் திருடிச் சென்றுள்ளனராம். அதே இரவு நெல்லியடியிலுள்ள இராசன் என்பவருடைய வீட்டில் துணிகரத் திருட்டு நடைபெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ் வீட்டில் 5000 ரூபா பெறுமதியான நகைகளும், 2000 ரூபா பெறுமதியான உடுப்புக்களும் களவாடப்பட்டுள்ளனவாம். நகைப்பெட்டிக்கு அருகில் திருடர்கள் விட்டுச்சென்ற பொல் ஒன்று காணப்பட்டது.

## எம். பி. க்கு முறையீடு

கிளிநொச்சி, திங்கள்

கிளிநொச்சி அக்கராயன் குளம் பஸ்சேவை மிகவும் மோசமடைந்துள்ளது. நாள் ஒன்றுக்கு மூன்றுதடவைகள் சேவை செய்து வந்தபஸ் இப்போது ஒருதடவையே சேவையில் ஈடுபட்டு வருகிறது. இதனால் இப்பகுதிப் பொதுமக்கள் பெரிதும் கஷ்டமடைகிறார்கள். போக்குவரத்தில் இப்பகுதிக்கு ஒரு நிரந்தரமான சேவையை நேர அட்டவணைப்படி நாளொன்றிற்கு குறைந்தது நான்கு முறையாவது சேவைக்கமர்த்துமாறு இப்பகுதிமக்கள் கிளிநொச்சி எம்.பி. திரு. கா. பொ. இரத்தினத்திடம் முறையிட்டுள்ளனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் பொதுத்தேர்தல்

# டி கோல் கட்சியினருக்கு அதிக ஆதரவு முதல் முடிவுகளில கிடைத்துள்ளது

## ஐ.அ.கு. - இஸ்ரேல் துருப்புகளுக்கிடையே கடும் பீரங்கிச் சண்டை

### சூயஸ் கால்வாய் நெடுகே நடந்தது

கெயிரோ, ஜூன் 24

சூயஸ்கால்வாயின் இரு புறங்களிலும் ஐக்கிய அரபுக்குடியரசுத் துருப்புகளும், இஸ்ரேல் துருப்புகளும் சுமார் ஒன்றரை மணி நேரம் கடும் பீரங்கிச் சண்டையில் ஈடுபட்டன.

இஸ்மெயிலாவுக்கருகே ஆரம்பித்த இச்சண்டை சூயஸ்கால்வாய் நெடுகே 85 மைல் தூரத்துக்குப் பரவியது.

ஆறு இஸ்ரேலிய டாங்கிகளை நாசப்படுத்தியதாக ஐ. அ. கு. தெரிவித்தது.

இச்சண்டையில் 6 ஐ. அ. கு. துருப்புகள் காயப்படுத்தப்பட்டதாகவும், 10 பேர் கொல்லப்பட்டதாகவும் இஸ்ரேல் அறிவித்தது.

இஸ்ரேலிய துருப்புகள் சுட்டதன் விளைவாக ஐ. அ. கு. ஆஸ்பத்திரி ஒன்றும் தீப்பற்றிக்கொண்டதாகக் கூறப்பட்டது.

ஐ. நா. பார்வையாளர் பின்னர் சண்டை நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்தனர்.

## இஸ்ரேல் - ஜோர்தான் துருப்புகளும் மோதல்

அம்மான், ஜூன் 24

இஸ்ரேலியத் துருப்புகளுக்கும் ஜோர்டான் துருப்புகளுக்கும், ஜோர்டான் ஆற்றுக்கரையில் நடந்த துப்பாக்கிச் சண்டையொன்றில் 2 இஸ்ரேலிய போர் வீரர் காயத்துக்குள்ளானதாக அம்மான் வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேல் பிடித்துள்ள பகுதியில், ஜெரிக்கோ நகருக்கருகே இஸ்ரேலியத் துருப்புகளுடன் அரபுப் போர் வீரர் நடத்திய மோதலொன்றின்போது, 35 இஸ்ரேலியப் போர் வீரர் காயப்படுத்தப்பட்டதாகவும் செய்திகள் தெரிவித்துள்ளன. இஸ்ரேலிய ஹெலிகொப்டர் விமானமொன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அவை தெரிவித்தன.

இஸ்ரேல் வட்டாரங்கள் தமது பக்கத்தில் ஒரே ஒரு போர் வீரர் மட்டும் கொல்லப்பட்டதாகத் தெரிவித்துள்ளன.

## அஸ்ஸாமில் வெள்ளநிலை

ஷில்லொங், ஜூன் 24

அஸ்ஸாமில் கடந்த சில தினங்களாகப் பெய்த கடும் மழையையும் வெள்ளத்தையும் தொடர்ந்து வானம் வெளித்திருந்தது ஆனாலும் வெள்ள நிலைமையில் மாற்றம் எதுவுமில்லை.

வெள்ளத்தில் பாதிக்கப்பட்டமக்களுக்குத் தொடர்ந்து நிவாரணமளிக்கப்பட்டு வருகின்றது விமானப்படை விமானங்களும் ஹெலிகொப்படர் விமானங்களும் நிவாரண வேலைகளில் ஈடுபட்டுள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் அகதிகள் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளனர்.

பிரம்மபுத்திர ஆறு அபாயகரமாக உயர்ந்து வருகிறது. கடந்த ஆறு வருடங்களில் ஆக உயர்ந்த மட்டத்தை அது அடைந்துள்ளது. அதன் கிளை நதிகளும் வெள்ளம் பெருக்கெடுத்தே ஓடுகின்றன, 16 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

## பிரதமர் பொம்போடுவும் 13 மந்திரிகளும் வெற்றி

பாரிஸ், ஜூன் 24

பிரான்ஸில் நேற்று நடைபெற்ற பொதுத்தேர்தலில், இதுவரை வந்த முடிவுகளின்படி, ஜனாதிபதி டிகோலுக்கு அதிக ஆதரவு கிடைத்துள்ளது.

சட்டசபைகளுக்கான 487 ஸ்தானங்களுக்கு நடைபெறும் தேர்தலின் முதலாவது சுற்று முடிவுகளில், 155 ஸ்தானங்களுக்கானவை வெளியாகின. இவற்றில் 115 ஸ்தானங்கள் டி கோல் கட்சிக்குக் கிடைத்துள்ளன. டிகோலுக்கு அதிக ஆதரவு அளிக்கும் சுயேச்சை குடியரசுக்கட்சிக்கு 27 ஸ்தானங்கள் கிடைத்தன. மத்தியகட்சிக்கு நான்கும், கம்யூனிஸ்ட் கட்சிக்கு 5 ஸ்தானங்களும்கிடைத்தன. கட்சிசார்பற்ற ஒருவருக்கு ஒரு

(6-ம் பக்கம் பார்க்க)

"ராதா"

99 & 999 ஐவ்வாது பத்தி

99 & 999 ஐவ்வாது பத்தியின் நறுமணம் இல்லம் முழுவதும் வியாபித்து உங்களனைவரையும் சுகானுபவத்தில் ஆழ்த்துகிறது. உங்கள் ஒவ்வொரு இல்லங்களிலும் வியாபார நிலையங்களிலும் காரியாலயங்களிலும் வைபவங்களிலும் அவசியம்இடம் பெறவேண்டிய ஒன்று 99 & 999 ஐவ்வாது பத்திகள்.

தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்

ஏக விநியோகஸ்தர்கள் :

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

53, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.
160, செட்டியார் தெரு கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

## சைகோன் மீது கடும் தாக்குதல்

### வியட்கொங்கியர் நடத்தினர்

### 2,000 வடவியட்னுமியர் கொல்லப்பட்டனர்

சைகோன், ஜூன் 24

தென் வியட்னும் தலைநகரான சைகோன் மீதும் அதன் சுற்று வட்டாரங்கள் மீதும் வியட்கொங்கியர் நேற்று கடுமையான தாக்குதல் நடத்தினர். இத்தாக்குதலினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் செயிலான் தளத்தைச் சுற்றி கடந்த 5 வாரங்களாக நடைபெற்ற சண்டையில் சுமார் 2,000 வடவியட்னுமியரைக் கொன்றதாக அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சண்டையில் தமது பக்கத்தில் 260 கடற்படையினர் இழக்கப்பட்டதாகவும், 1500 பேர் காயப்பட்டதாகவும் அவை மேலும் குறிப்பிட்டன.

---

ஆஸ்திரேலிய

## பார்லிமெண்டரி தூதுகோஷ்டி புதுடில்லி வந்தது

புதுடில்லி, ஜூன் 24

பத்துப்பேர் அடங்கிய ஆஸ்திரேலிய பார்லிமெண்டரி தூதுகோஷ்டி ஒன்று, புதுடில்லி வந்து சேர்ந்துள்ளது.

---

இந்திய

## பார்லிமெண்டரி தூதுகோஷ்டி தாஷ்கெண்டில்

தாஷ்கெண்ட், ஜூன் 24

ரஷ்யாவுக்கு விஜயம் செய்துள்ள இந்திய பார்லிமெண்டரி தூதுகோஷ்டி, நேற்று தாஷ்கெண்டில், காலஞ்சென்ற இந்தியப் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி 1966-ல் உயிர் நீத்த இடத்தைச் சென்று பார்த்தது.

## மாஸ்கோவில் இந்திய வர்த்தக மந்திரி

மாஸ்கோ, ஜூன் 24

இந்திய வர்த்தக மந்திரி திரு. தினேஷ் சிங், சோவியத்-இந்திய வர்த்தகத்தின் சகல அம்சங்களையிட்டும் ஆராயு முகமாக இன்று மாஸ்கோ வந்து சேர்ந்துள்ளார்.

மாஸ்கோ விமான நிலையத்தில, இந்தியப் பத்திரிகையாளரிடம் பேசுகையில் கடந்த 15 வருடங்களில் இந்திய - சோவியத் வர்த்தகம் 300 மடங்கு அதிகரித்திருப்பதாகக் கூறினார்.

இரு நாடுகளுக்கிடையேயான வர்த்தகம் இன்னும் அதிகரிப்பதற்கு சந்தர்ப்பம் பெருமளவு இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.



களை கட்டி
வெங்காய
விளைச்சலைப் பெருக்கும்
டக்தல்

வெங்காயம் புதைத்து 2-3 நாட்களில் ஏக்கருக்கு 6-8 றுத்தல் 40 கலன் நீரில் கலந்து பாவித்தல் எல்லா களைகளை கட்டுப் படுத்தும்.

ஹேலீஸ் லிமிட்

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்

பிறவின்ஸல் டிஸ்ட்ரி பியூட்டர்ஸ்
ஸ்டோஸ் கட்டிடம்
யாழ்ப்பாணம்.

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாசகம்**

ஒரு பகுதியினருக்கு மட்டுமே அன்பைச் செலுத்திக் கொண்டிருக்காதீர்கள். அன்பு பரந்து கொண்டிருக்கட்டும். உண்மையான அன்பு பாகுபாடற்றது. அன்பு, இவ்விதம்பேதம் கடந்து செல்லும்போது தான் அதன் உண்மை நிலையை உணரமுடியும்.

—டால்ஸ்டாய்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389.

கீலக வருஷம் ஆனி மாதம் 12-ந்திகதி
(25-6-68)


## சமஷ்டிக் கோரிக்கை

தமிழரசுக்கட்சி தனது சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட வேண்டுமென்று ஆளும் கட்சி எம். பி. கள் சிலர் யோசனை கூறியிருப்பதாகவும் சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிட்டால் மாவட்ட சபை மசோதாவுக்கு அவர்கள் ஆதரவளிப்பதாக தெரிவித்திருப்பதாகவும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. மற்றோர் ஆங்கிலப் பத்திரிகை, 'தமிழரசுக்கட்சி தனது சமஷ்டிக் கோரிக்கையை கைவிடவேண்டு'மென்று யோசனை கூறியிருக்கிறது. சமஷ்டி தான் தமிழரசுக்கட்சியின் இலட்சியம் என்றும் சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக்கட்சி கைவிடமாட்டாதென்றும் தமிழரசுக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. அ. அமிர்தலிங்கம் தெரிவித்திருக்கிறார். சமஷ்டிக் கோரிக்கையைக் கைவிடவேண்டியது அவசியம் தானா? சமஷ்டி வேண்டும் என்று கோரத்தான் வேண்டுமா?

சிங்கள மக்களும் தமிழ் பேசும் மக்களும் ஐக்கியமாக அதே சமயம் சம உரிமையுடன் வாழ்வதற்கு, சமஷ்டி ஆட்சி எனப்படும் இணைப்பாட்சி முறையே சிறந்ததென்றும் இலங்கையின் ஒற்றை ஆட்சி அமைப்பு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடிமைகளாக்க வழி வகுத்து வருகிறதென்றும ஒற்றை ஆட்சி அமைப்பை மாற்றி சமஷ்டி ஆட்சி அமைப்பை இங்கு ஏற்படுத்த வேண்டுமென்பது தான் தமிழரசுக்கட்சியின் நோக்கம். இது அந்தக் கட்சியின் இலட்சியமும் கொள்கையுமாகும். இதனால் அது 'சமஷ்டிக்கட்சி' என்றும் அழைக்கப்படுகிறது. சமஷ்டி ஆட்சி அமைப்புமுறை உலகில் பல இடங்களிலிருக்கிறது. இந்திய அரசியல் அமைப்பும் சமஷ்டி முறையைக் கொண்டதே. அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளிலும சமஷ்டி ஆட்சி அமைப்புமுறை உள்ளது. இந்தநாடுகள் பிளவு பட்டுப்போகவில்லை; அங்கு தேசிய ஐக்கியம் குலைந்துவிடவுமில்லை.

சமஷ்டி என்பது தனி நாடு கோரிக்கையுமல்ல; பிரிவினையுமல்ல. ஆனால் இங்கு சமஷ்டி என்பது நாட்டைப் பிரிப்பது என்று அரசியல் தெரிந்தவர்களே பிரசாரம் செய்து வருகின்றனர். வகுப்புத் துவேஷத்தைக் கிளப்பித் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு இது பயன்படலாம்; பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றுமில்லாத மாவட்டசபைகள் கூட நாட்டைப் பிரித்துவிடும் என்றுபிரசாரம் செய்யும் பொழுது சமஷ்டி நாட்டைப் பிரிக்கும் என்று எண்ணுவதில் ஆச்சரியமில்லை. மாவட்ட சபைகளோ, சமஷ்டி ஆட்சியோ அமைக்கப்பட்டால் இங்குள்ள தமிழர்கள் தென்னிந்தியாவுடன் சேர்ந்து விடுவார்களென்றும் சிலர் பூச்சாண்டி காட்டுகின்றனர்.

'தாயும் பிள்ளையும் ஒன்றானாலும் வாயும் வயிறும வேறு' என்பார்கள். தென்னிந்தியாவில் தமிழர்கள் வாழ்ந்தாலும் இலங்கையில் வடக்கு கிழக்குப் பகுதிகளிலும் தமிழர்கள் வாழ்ந்தாலும் இருவரும் ஒரே மொழியை, ஒரே கலாச்சாரத்தை உடையவர்களானாலும் இருவரும் வேறு இரண்டு இரண்டு தனித்தனி நாடுகள் என்பதை இந்தியாவிலுள்ள ஆசிரியர்கள் இங்கு அவசியமில்லை என்றும் இங்கு வெங்காயம் அதிகஅளவில் உற்பத்தியாகும பொழுது இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யத் தேவையில்லையென்றும் சொன்னவர்கள் இலங்கைத்தமிழர்கள்தான். இலங்கைத் தமிழர்கள் தேசபக்தியில் எவருக்கும் குறைந்தவர்களல்லர் இலங்கைக்குசுதந்திரம்வேண்டுமென்று முதல் குரல் எழுப்பியவர்களும் தமிழர்கள்தான். தென்னிந்தியாவுடன் தமிழர்கள் சேர்ந்துவிடுவார்களென்பது இலங்கைத் தமிழரின் தேசபக்தியையே சந்தேகிப்பதாகும்.

சமஷ்டிஆட்சிக் கோரிக்கையை தமிழரசுக்கட்சி கைவிட வேண்டுமென யோசனை கூறுவோர் இந்தக் கோரிக்கை ஏன் எப்படி எழுந்தது என்பதையும் சிந்திக்கவேண்டும். இலங்கைக்கு அரசியல் சுதந்திரம் கிடைத்த பொழுது, இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினரான தமிழர்களின் வாக்குரிமை, குடியுரிமை பறிக்கப்படுமென்று எவரும் கூறவில்லை. சுதந்திரம் வழங்கப்பட்ட சமயத்தில் சிங்களமும், தமிழும் தான் இந்த நாட்டின் ஆட்சி மொழிகளாகவும் தேசிய மொழிகளாவும் இருந்தன. மொழி உரிமை பறிக்கப்படுமென அச்சமயத்தில் எவரும் சொல்லவில்லை. திட்டமிட்ட குடியேற்றத்திட்டங்கள் பற்றியும் அப்போது கூறப்படவில்லை. சுதந்திரம் கிடைத்த பின்னர் பெரும்பான்மைச் சமூகத்தினர், தமது பெரும்பான்மைப் பலத்தைக்கொண்டு சிறுபான்மையினரின் உரிமைகளைப் படிப்படியாகப் பறிக்கத் தொடங்கினர். இந்நிலையில்தான் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களின் உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளவும் அவர்கள் சம உரிமைகளுடன் வாழவும் சமஷ்டி ஆட்சிதான் சரியான வழி என்ற நோக்கத்துடன தமிழரசுக்கட்சி தோன்றியது அதற்கு தமிழ்பேசும் மக்கள் அமோக ஆதரவும் அளித்தனர்.

இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முன்னர் தமிழ்மக்களுக்கு இருந்த உரிமைகளை அழித்து அவர்கள் இதர சமூகத்தவர்களுடன் சம உரிமைகளுடனும் சமசந்தர்ப்பங்களுடனும் இந்த நாட்டின் சுதந்திரத்தை தாம்களும் அனுபவிக்கக்கூடிய முறையில் வாழ்வதற்கு பெரும்பான்மைச் சமூகத்தினர் பெருந்தன்மையுடனும் தாராளமனத்துடனும் நடந்துகொண்டால் தமிழரசுக்கட்சி [illegible] வேண்டும் என்று ஏன் கோரப்போகிறது?

# 'உணவுற்பத்தி, கிராமவிஸ்தரிப்பு, ...
# மாவட்டசபைக்கு அதிக அ...

## கொட்டடி சைவவிருத்தி சங்க தீர்மானங்ள்

யாழ்ப்பாணம், செவ். கொட்டடி சைவவிருத்திச் சங்கத்தின் 30-வது வருடாந்த மகாசபைக் கூட்டம் வில்லூன்றி விநாயகர் ஆலய மண்டபத்தில் திரு. வெ. கோபாலபிள்ளை தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்ற 30 ஆண்டுகளுக்கு மேலாக வில்லூன்றி மயானத்தைப் பரிபாலித்து வரும் ஸ்ரீ சோ. இராசரத்தினம் செட்டியாரே மேலும் நிர்வாகத்தைத் தொடர்ந்து நடாத்தவேண்டுமென இச்சபை அங்கீகாரம் வழங்குகின்றது.

வில்லூன்றி மயானத்தை இன்னும் திருத்தமானமுறையில் அமைத்துக்கொள்வதற்குச் சபையில் போதியளவு பணம் இல்லாதிருப்பதால் இச்சங்க அங்கத்தவர்களை வரையும் போதியளவு பணம் உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்வது.

புதுவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. வெ. கோபாலபிள்ளை, உபதலைவர்: திரு. கே. செல்லையா, செயலாளர்: சோ. இராசரத்தினம் செட்டியார், பொருளாளர்: திரு. நா கிருஷ்ணசாமி.

## அபராதம் ரூ. 100

வல்வெட்டித்துறை, தில் கெருடாவிலைச் சேர்ந்த இராஜகுரு ஆரோக்கியம் அல்லது அரியம் என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த ஐயாமுத்து முத்துலிங்கத்திற்கு கடந்த மாசி மாதம் 9-ந் திகதி கத்தியால் வெட்டிக் காயம் உண்டு பண்ணியதாக வல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. வினராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மாஜிஸ்டிரேட் எதிரியை குற்றவாளியாகக் கண்டு ரூபா 100 அபராதம் அல்லது 6 வாரச் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளார்.

உருளைக்கிழங்கு

## உற்பத்தி அதிகரிப்பு

கொழும்பு, திங்கள் இந்தவருடத்தில் இரு போகத்திலும் 34,000 தொன்னுக்கு மேலான அளவு உருளைக்கிழங்கு உற்பத்தியாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ்ப்பாணம், நுவரேலியா, பதுளை ஆகிய இடங்களில் இப்போது உருளைக்கிழங்கு பெருமளவில் பயிரிடப்பட்டுவருகிறது.

**மாவட்டசபை......**

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. வி. சுப்பிரமணியம் தலைமையில் நடந்த இக் கருத்தரங்கில் திரு. அமிர்தலிங்கம் தொடர்ந்தும் கூறியதாவது:

அடிமைப்பட்ட இந்தியாவிலும் பார்க்க சுதந்திர இந்தியாவில் ஹரிஜனமக்களுடைய உரிமைகள் உயர்ந்திருக்கின்றன. இலங்கையில் தமிழர்கள் ஓரளவு உரிமைகளைப் பெறும்போது தம் நசுக்கப்பட்டுவிடுவோம் என சிறுபான்மைத்தமிழர் நினைக்கத் தேவையில்லை. சமூக ஏற்றத்தாழ்வு சட்ட மூலமும், தேவையானால் இன்னும் வேண்டிய சட்டங்களை இயற்றி அவர்கள் பிரச்னைகளைத் தீர்க்கலாம்.

**இன்றைய பலன்**

[25 - 6 - 68]
ஆனி மீ 12 உ
செவ்வாய்க்கிழமை

திதி- அமாவாசை பி. இ. 4-20 வரை மேல் பிரதமை,

நட்சத்திரம்- மிருகசீரிடம் இரவு 8 02 வரை மேல் திருவாதிரை.

ராகுகாலம் - 2-55 4-25.

சுபநேரம்- 10-25—11-55.

இன்று பிறந்தவர்களுக்கு- இவ்வாண்டு கவலைக்குரிய எண்ணங்களைக் கொடுக்கும். ஆயினும் எதிர்பாராத வகையில் பொருள்வரவு, உத்தியோக நலன், கல்விபயிலுவோர் கவனம்செலுத்தில் நன்மையுண்டு. காதலர் வாழ்வில் இவ்வாண்டு மந்த நிலைமையைக் கொடுக்கும்.

மேஷம்- பொருள் வரவு புண்ணியம் கேட்டல்.
ரிஷபம்- லாபம் அதிகம், கொந்தளிக்கும் மனம்.
மிதுனம்- ஆசை அலைகள் அவப்பெயர் உண்டு
கடகம்- குடும்பம் சிறக்கும், செல்வாக்கு பெருகும்.
சிம்மம்- லோசடி நடக்கும் வழிப்புடன் இரு
கன்னி- நல்ல முடிவு நன்மைகள் சேரும்.
துலாம்- அறவழி நாட்டம், பரம்பொருள் சிந்தை.
விருச்சிகம்- ஆயுக பயம், அவசரம் வேண்டாம்.
தனுசு- இரு மனம் கலக்கும், இன்மையும் உண்டு
மகரம்- சிந்தனை மிகுதி, தொழிலில் தொல்லை.
கும்பம்- தந்தையின் அன்பு. தனமுடன் புகழ்.
மீனம்- தொழிலில் போட்டி தொல்லையைத் தவிர்.

— சோதிடக் கலாநிதி —
[illegible]

# கருத்தரங்...
# அமிர்தலிங்கம் எம். பி...



உடுவில், திங்கள்

'மாவட்டசபைகளைப்பெற்றுக்கொள்வதன்மூலம் நாம் சிங்களத்தை ஏற்றுக்கொண்டுவிட்டதாகவும், தமிழர்கள் காட்டிக்கொடுக்கப்பட்டு விட்டனர் என்றும் சமஷ்டிக்கொள்கை கைவிடப்பட்டு விட்டதென்றும் கூறும் பிரசாரங்கள் அனைத்தும் அர்த்தமற்றவை.

நாடு முழுவதும்தமிழுக்கு உரிமை கிடைக்கவில்லையென்பதை ஒப்புக்கொள்கிறோம். வடக்கு,கிழக்கு மாகாணங்களில் மாவட்டசபைகளின் கீழ் சிங்களமும் தமிழும் சம அரசாங்க வேலைகளுக்கும் உபயோகிக்கப்பட வேண்டும். மாவட்டசபை நகல்மசோதாவின்படி, 'சிங்களத்துடன் தமிழும்' என்ற வார்த்தை புகுத்தப்பட்டுள்ளது. இதனால் 'சிங்களம் மட்டும்' என்பது அழிந்து இருமொழிகளும சமஅந்தஸ்துப் பெறுகின்றன.

மாவட்டசபை அமைப்பின் மத்தியஅரசு அவசியம் ஏற்படாமலே தலையிட முடியும்.

அதிகாரங்கள் பரவலாக்கப்படுவதுதான் மாவட்ட சபைகளின் நோக்கம். எனவே சமஷ்டி அமைப்பில், அதிகாரங்களை பரவலாக்கும் மாவட்டசபைகள் ஓர் அங்கமாக விளக்குவதால அதனை இன்று ஏற்றுக்கொண்டுள்ளோம். சமஷ்டிக்கொள்கை கைவிடப்பட்டதாகக் கூறுவதில் அர்த்தமில்லை.'

நேற்று சுன்னாகம் நூல்நிலைய கருத்தரங்கில் 'மாவட்ட சபைகள்' பற்றிவிளக்கம்கூறிய வட்டுக்கோட்டை தொகுதி எம் பி. திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. வி சுப்பிரமணியம் கருத்தரங்கத்திற்கு தலைமை வகித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசியதாவது:

மாவட்டசபைகள் நாட்டைப் பிளவுபடுத்தும், அடிமைப்படுத்தும் ஒரு நிறுவனம் என தென்னிலங்கையிலும், மாவட்டசபைகளால் பிரயோசனமில்லை; அவைபயனற்றவை. குறிப்பாக சிறுபான்மைத் தமிழருக்குத் தீமைதர வல்லன என்று வடஇலங்கையிலும் தீவிர பிரசாரம் செய்யப்பட்டு வரும் இவ்வேளையில் அதன் வரலாற்றையும், உண்மை நிலையையும் நாம் மக்களுக்கு எடுத்துக்காட்டுவது அவசியம்

இன்றைய நிர்வாக அமைப்பு ஆங்கிலேயர் காலத்து இருந்ததைப் போன்றதே. மகாராணி இங்கிலாந்தில் உத்தரவு பிறப்பிக்க இலங்கைத் தேசாதிபதி அதனை கட்டளையாக்க மாகாண அதிபர்கள் அமுலாக்கும் முறைதான் இன்று இருந்து வருகிறது.

### டொனமூர் அமைப்பு ஏற்றது

இம்முறை ஏற்றதல்லஎன்பது எமது கருத்து. டொனமூர் அபிப்பிராயமும் அதுவே. டொனமூர்அமைப்பினர் பிரதேசசபைகளை அமைத்து ஜனநாயகம்பரவலாக்கப்படவேண்டும் எனத் தெரிவித்திருந்தனர். அதற்கு ஆயத்தமும் செய்தனர். ஆனால் 1939ம் ஆண்டு யுத்தமும் அவசரநிலையும் அதைத் தடைசெய்தன. 1945ல் இலங்கை அரசியல் திட்டத்தை மாற்றியமைக்க ஒரு குழு நியமிக்கப்பட்டபோதும் அது செய்யப்படவில்லை. 1955ல் சொக்ஸி தலைமையிலான குழுஇதைப் பரிசிலனை செய்து மாகாண அதிபர்களின் அதிகாரம் பரவவேண்டுமெனச்சிபார்சு செய்தது. 195[illegible] இது ஒரு உருவமாக விஸ்வரூபமெடுத்தது. பண்டாரநாயகா ஆட்சியில் இது ஓர் இறுதியான முடிவாக வெளியிடப்படவில்லை. மக்கள் அபிப்பிராயம்கோரி இதுவெளியிடப்பட்டபின் சிங்கள-தமிழ் மொழிப் பிரச்னையை சுமுகமாகத் தீர்க்கமுடியுமா என ஆராய எம்மை அழைத்துப் பேசினர்.

1957ல் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை மேலும்விரிவுபடுத்தி எமதுகோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தனர். ஆனால் இதைத் தொடர்ந்து தெற்கே திரு. பண்டாரநாயகாவை வீழ்த்தத் தருணம் பார்த்திருந்த ஐ.தே.கட்சி அவர் சிங்களவரை தமிழருக்கு விற்றுவிட்டதாகவும் [illegible] தமிழ்காங்கிரஸ் தலைவர் செல்வா தமிழரை விற்றுவிட்டதாயும் குரலெழுப்பினர்.

1957ல் ஐ.தே.க.வினதும் தமிழ்காங்கிரசினதும்எதிர்க்குரலகேட்டது. ஆனால்இன்று 1968ல் இடதுசாரிகளும்தமிழ்க்காங்கிரசும் எதிர்க்குரல் எழுப்புகின்றன. கட்சிகள் தான் தெற்கே மாறின. ஆனால் கோஷம் மாறவில்லை.

திரு.பண்டாரநாயகாவின் கட்சியிலிருந்த வலதுசாரிகள் எதிர்க்குரல் எழுப்பியதாலேதான் பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டது எனினும் தமிழ் மொழி உபயோகச் சட்டம் பிரதேசசபைகள் பற்றி திரு. பண்டாரநாயகா உறுதி கூறியது நினைவிருக்கலாம். ஒப்பந்தம் கிழிந்த போதும் கொள்கையை அவர்கைவிடவில்லை.

1958ன்பின்இரத்தக் களரி ஏற்பட்டு தடைப்படுத்தப்பட்ட ஓர் இயக்கமாக தமிழரசுக்கட்சி இருந்தபோது, தமிழ்மொழி உபயோகச் சட்டம் பார்லிமெண்டில் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது இதன்பின் ஓராண்டில் அரசாங்கத்தில்பிளவு ஏற்பட்டது; 1959ல் திரு. பண்டாரநாயகா கொலை செய்யப்பட்டார். திரு. பண்டாரநாயகா இருந்திருந்தால் தமிழ்மொழிச் சட்டம் போல பிரதேச சபைகளும் வந்தே இருக்கும்.

1960 மார்ச்சில் எந்தக் கட்சி ஆட்சியில் அமரும் எனக் கூறமுடியாத நிலையில் ஐ. தே. கட்சிக்கும் ஸ்ரீ ல. சு. கட்சிக்கும்எமதுமுக்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ப்பு, தொழில்துறைகளில் ...க அதிகாரமிருக்கும் ...தரங்கில் ...எம்.பி. விளக்கம்



...மும் அவசரநிலையும் ...தி தடைசெய்கன. ...ல் இலங்கை அரசியல் ...த்தை மாற்றியமைக்க ...குழு நியமிக்கப்பட்ட ...ம் அது செய்யப்பட ... 1955ல் சொக்ஸி ...மையிலான குழு இதைப் ...லனை செய்து மாகாண ...ரிகளின் அதிகாரம் ...வேண்டுமெனச் சிபார்சு ...து. 195...ல் இது பட ...க விஸ்வரூபமெடுத் ...பண்டாரநாயகா ஆட் ...இது ஓர் இறுதியான ...க வெளியிடப்பட ... மக்கள் அபிப்பிரா ...ாமி இதுவெளியிடப் ...பின் சிங்கள-தமிழ் ...ப் பிரச்னையை சுமுக ...தீர்க்கமுடியுமா என ...எம்மை அழைத்துப் ...ர்.

...7ல் பண்டா-செல்வா ...த்தை மேலும்விரிவு ...றி எமது கோரிக்கைகளை ...க்கொள்ளத் தயாராக ...னர். ஆனால் இதைத் ...ர்ந்து தெற்கே திரு. ...ரநாயகாவை வீழ்த் ...ருணம் பார்த்திருந்த ...கட்சி அவர் சிங்கள ...தமிழருக்கு விற்று ...தாகவும் வ...கே ...ாங்கிரஸ் தலைவர் ...ா தமிழரை விற்று ...தாயும் குரலெழுப்பி

...7ல் ஐ.தே.க.வினதும் ...காங்கிரஸினதும் எதிர்க் ...கேட்டது. ஆனால் இன்று ...ல் இடதுசாரிகளும் தமி ...ங்கிரசும் எதிர்க்குரல் ...புகின்றன. கட்சிகள் ...தெற்கே மாறின. ...கோஷம் மாறவில்லை. ...பண்டாரநாயகாவின் ...லிருந்த வலதுசாரி ...திர்க்குரல் எழுப்பிய ...லதான் பண்டா— ...ா ஒப்பந்தம் கிழிக் ...டது எனினும் தமிழ் ...உபயோகச் சட்டம் ...சசபைகள் பற்றி ...ண்டாரநாயகா உறுதி ...து நினைவிருக்கலாம். ...தம் கிழிந்த போதும் ...கையை அவர்கைவிட ...

...ன்பின் இரத்தக் களரி ...ட்டு தடைப்படுத்தப் ... ஓர் இயக்கமாக தமி ...கட்சி இருந்தபோது, ...மொழி உபயோகச் ...ம் பார்லிமெண்டில் ...டுவந்து நிறைவேற் ...ட்டது இதன்பின் ஓரா ...அரசாங்கத்தில் பிளவு ...ட்டது; 1959ல் திரு. ...ரநாயகா கொலை ...ப்பட்டார். திரு. பண் ...ாரநாயகா இருந்தி ...ல் தமிழ்மொழிச் சட் ...போல பிரதேச சபைக ...ந்தே இருக்கும்.

...0 மார்ச்சில் எந்தக் ...ஆட்சியில் அமரும் ...கூறமுடியாத நிலை ...தே.கட்சிக்கும் ஸ்ரீ ல. ...சிக்கும் எமதுமுக்கிய 4

கோரிக்கைகளைச் சமர்ப்பி த்து ஆதரவளிக்குமென வந் தோம்- டட்லி இதனை ஏற்க மறுத்தார்- ஸ்ரீமாவோ பண் டாரநாயகா மலைநாட்டுத் தமிழர் பிரதிநிதிகளாக 4 பேருக்குப் பதிலாக 2 பேரை நியமிக்கவும் மொழிபிரதேச சபைகள் விஷயத்தில் தமது கணவரின் கொள்கையை ஏற்பதாயும் இந்தியப் பிரஜைகள் பிரச்னை இந்திய அரசாங்கத்து டன் பேசி முடிவாக்குவதா கவும் தெரிவித்தார். இத னைத் தொடர்ந்தே 1960 மார்ச்சில் தமிழரசுக் கட்சி ஸ்ரீ ல.சு.க.வை ஆதரித்தது.

1960 ஜூலையில் நடந்த தேர்தலில் ஸ்ரீ ல. சு. கட்சி தனித்து அரசாங்கத்தை சிம்மாசன பிரசங்கத்தில் தமிழ்மொழிச்சட்டமும் மலைநாட்டுத் தமிழர் நியமனமும் இடம் பெறும் என்று கூறியிருந்தனர்.

## பிரதேசசபையும் மாவட்டசபையும்

1963ல் சிறிமா முதன்முதலாக பிரதேச சபைக்குப் பதிலாக மாவட்ட சபைகள் அமைப்பதாக கூறினார் இது. சம்பந்தமாக மூவர் கொண்ட ஒரு குழுவும் நியமிக்கப்பட்டது. சட்டங்களை அவர்கள் அராய்ந்து மாவட்ட சபைக்கான சட்டங்களை உருவாக்கினர். 1963ல் இடதுசாரி ஐக்கிய முன்னணியினர் காலிமுக கடற்கரையில் வைத்து கொள்கைப் பிரகடனம் செய்கையில் அரசாங்க நிர்வாக அமைப்பை மாற்றி அமைத்து கச்சேரி முறை ஒழிக்கப்பட்டு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாவட்டசபைகள் நிறுவப்படும் கூறியுள்ளனர்.

தமிழ்காங்கிரஸ் எம். பி யாக 9964ல் இருந்த உடுப்பிட்டி எம்.பி, திரு.எம்- சிவசிதம்பரம் "சிறுபான்மை மக்களின் பிரச்னைகளை ஒரளவேனும் குறைக்க மாவட்டசபைகளை எப்போ கொண்டு வரப்போகிறீர்கள்?" என்று பார்லிமெண்டில் கேட்டுள்ளார். இது அமைக்கப்படுவது மிக அவசியம் என்றும் அவர் 1964ல் கூறியுள்ளார்.

எனவே அன்று ஆதரித்த பலர் இன்று இமமசோதாவை எதிர்ப்பது ஏனென்று தெரியவில்லை எனவே இலங்கையின் முக்கிய அரசியல் கட்சிகள் அனைத்தும் இவ்வமைப்பை ஏற்றுக்கொண்டுளன.

## நன்மைகள்

இன்றைய நிலையில் உள்ளூராட்சிசபைகள் குறித்த ஒரு எல்லைக்குள்ளேயே இயங்குகின்றன. எல்லைக்கு அப்பாற்பட்ட வேலைகளுக்கு அமச்சரவையை நாடவேண்டியுள்ளது. தொழிற்சாலைகள், சிறுகைத்தொழில்களை அமைக்க மந்திரியை எதிர்பார்க்க வேண்டியுள்ளது இது ஜனநாயக முறையல்ல இப்பிரச்சனைகளை அந்தந்த மாவட்டப் பிரதிநிதிகள் கூடிதீர்க்க முடியும்.

பண்டா-செல்வா ஒப்பந்தத்தில் அதிகாரம் கூடிய சபைகளை பெறமுயன்றோம் அது முடியாத நிலையில் சிறிது விட்டுக் கொடுத்து ஓரளவு அதிகாரமுள்ள சபைகளை யேனும்பெற பலமுறை முயன்று பத்தாவது தடவையாக இதை ஏற்படுத்தியுள்ளோம்.

குறைந்த அதிகாரம் கொண்ட மாவட்ட சபைகளே நாட்டைத்துண்டாடும் என்றால் பிரதேசசபைகளை தரமுயன்றவர்களென்னநினைத்து ஒப்புக்கொண்டார்கள்? விவசாயம், கைத்தொழில், உணவுற்பத்தி, கிராம விஸ்தரிப்பு திட்டம், கடல் தொழில் போன்றவற்றில் கூடிய அதிகாரம் இச்சபைகளுக்கு உண்டு.

எல்லைமீறி அரசாங்கத்திட்டங்களை முறியடிக்க இச்சபைகள் தலைப்பட்டால் அதைத்தடுக்க மத்திய அரசிற்கு உரிமையுண்டு என பிரதமர் கூறினாரே தவிர எதற்கும் மந்திரிசபையை எதிர்பார்க்க வேண்டுமென அவர் கூறவில்லை.

சிங்களச்சட்டத்தை நாம் ஏற்று விட்டதாக ஊர்காவற்துறை எம்.பி. கூறியிருப்பது தவறு. 1956ல் இலங்கை மொழிசிங்களம்எனக் கொண்டுவரப்பட்டாலும் 60ம் ஆண்டுவரை ஆங்கிலம் உபயோகமொழியாக இருக்கலாம் எனக் கூறப்பட்டது 1958ல் தமிழ்மொழிச் சட்டம் நிறைவேறினாலும் அதன் கீழ்கீழ விதிகள் ஏற்படுத்தப்படவேண்டியிருந்தமையால் அவை அமுலாக்கப்படவில்லை. இன்று கொண்டுவரப்படும் மாவட்டசபைகளின் கூற்றுப்படி தனிச்சிங்களம் ஏற்கப்படவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அரசாங்கமற்றும் கூட்டுத்தாபனங்கள் சட்டபூர்வமாகச் சேவை ஆற்றவும் பதிவு செய்யவும் தமிழ் மொழி கட்டாயமாக உபயோகிக்கப்பட வேண்டும் இங்குசிங்களமும் தமிழும் சமமாக உபயோகமாக வேண்டும்என்பதுதான் இப்தமாவட்டசபைகளின் மொழிக் கொள்கை ——

## வடக்கு……

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டுவருகிறது. இதற்கு பிரதமரின் உதவிக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம்.

விவசாயிகள் தமக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப்பயன்படுத்தி நாட்டின் உணவுப் பற்றுக்குறையை நீக்க ஆன முயற்சி மேற்கொள்ளவேண்டும்.

விவசாயத்துறையில் தேசிய அரசாங்கம்போதிய அக்கறை காட்டிவருகிறது இதனை விவசாயிகள் உணர்ந்து செயலாற்றமுன்வரவேண்டும். இதனால் அவர்கள் தாமும் முன்னேறவதோடு நாட்டையும் முன்னேற்றலாம்'

வவுனியா அரசாங்க அதிபர் திரு. பி. சி. பெரேரா, வவுனியா நகரசபைத் தலைவர் திரு. எம். பொன்னையா ஆகியோரும் பேசினர்.

## தெகிவளை,……

[8-ம் பக்கத் தொடர்ச்சி]

திரா] 816, ஜே. வி. டி. பீரிஸ் [யூ என் பி] 610, பெர்ணுண்டோ [சுயேச்சை] 65.

26-ம் வட்டாரம்: சொலமன் பெரேரா [சமசமாஜ] 1023, விக்டர் ஜெயசிங்கா [யூ என் பி] 577.

27-ம் வட்டாரம்: தந்தவாலாசில்வா [சமசமாஜ] 1416, அல்பேர்ட் ரத்ன [யூ என் பி] 35.

28-ம் வட்டாரம்: பிரிட்டோ [கம்யூனிஸ்ட்] 1287, குணசேகரா [யூ என் பி] 447

. 29-ம் வட்டாரம்- பிரசேனா [சுதந்திர] 9..., சந்திரசேனா ... 675.

## அழிந்து……

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தனிச் சிங்களத்தில்தான் இருக்கும். வடக்கு, கிழக்கில் 'தமிழிலும் வைக்கலாம்' என்று கூறப்படுகின்றது. ஆனல் தமிழில் பதிவுகள் இருக்கவேண்டுமென்று கட்டாயமில்லை. தமிழ்பகுதிகளில் உள்ள மாவட்டசபைகளிலும் பதிவுகள் சிங்களத்திலிருப்பதால் அது சரியா என்று தெரிந்துகொள்வதற்குச் சிங்களம் தெரிந்திருக்கவேண்டும். மாவட்டசபைகள் மத்திய அரசாங்கத்துடன் சிங்களத்தில் மட்டுந்தான் தொடர்புகொள்ள முடியும். இந்நிலையில் யாழ்ப்பாண மாவட்டசபைத் தலைவர், மத்திய அரசாங்கத்திற்குச் சிங்களத்தில் அனுப்பும் கடிதத்தைப் படித்துப் புரிந்து கொள்ளாமலே தனது கையெழுத்துப் போட்டு அனுப்பவேண்டியிருக்கும். அப்படியானல் தமிழ்ப் பகுதிகளிலுள்ள உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் தமிழ்பேசும் எம்.பி.க்களும் சிங்களத்தை நன்கு படிக்கவேண்டியநிலை ஏற்படும். சிங்களம் தெரியாதவர், மாவட்டசபைத் தலைவராகவிருந்து கடமையாற்றமுடியாது. ஆதலால் மாவட்டசபை மூலம் தமிழரின் மொழியுரிமை முற்றுகப் பறிக்கப்பட்டு, வடக்கு, கிழக்கிலும் சிங்களம் படிப்படியாகத் திணிக்கப்படும். மாவட்டசபைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் உள்ளூராட்சிமன்றங்களுக்கும் மாவட்டசபைகளுக்கும் போட்டி ஏற்பட்டு அபிவிருத்தி வேலைகளே நடைபெறுமல் போய்விடும்.

உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களை அதிகரிக்கும்படி நான் பிரதமரைக் கேட்டபோது அதற்கு அவர் சம்மதிக்கவில்லை. ஒரளவு இனத்துவேசமில்லாத பிரதமர் டட்லியே உள்ளூராட்சி மன்றங்களுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்க முன்வராதபோது இனிமேல்வரும் பிரதமர்கள் மாவட்ட சபைகளுக்கு கூடிய அதிகாரங்கள் வழங்குவரர்களென எதிர்பார்க்கலாமா?

தற்பொழுதுள்ள நிலைமையில் மாவட்டசபைமசோதா வராது. அப்படி வந்தாலும் இந்த அரசாங்கத்தினால் அதைச்செய்யவே முடியாது' மாவட்டசபை மசோதா வந்து சட்டமாக வர ஐந்து மாதங்கள் செல்லும். மாவட்டசபை நிறுவுவதற்கான பணம் 69-ம ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தான் ஒதுக்கப்படும். இது 69-ம் ஆண்டு ஆகஸ்டில் நடக்கும். 69-ம் ஆண்டு டிசம்பரில் அடுத்த தேர்தலுக்காகப் பாராளுமன்றம கலைக்கப்பட்டுவிடும். அடுத்து வரும் அரசாங்கம் பதவிக்கு வந்து முதல் வேலையாக மாவட்ட சபைகளை கலைத்துவிடும். ஆதலால் என்றேரு நாள் அழிந்துவிடப்போகும் மாவட்டசபைகளுக்காக எதற்காகப் பாடுபடவேண்டும்.

உப-சபாநாயகர் திரு. எம். சிவசிதம்பரம் பேசும் போது பாவனைப்பொருள் கட்டுப்பாட்டு திட்டத்தை எதிர்த்து தமிழ்க் காங்கிரஸ் பார்லிமெண்டில் ஒரு தனிநபர் பிரேரணை கொண்டு வருமெனத் தெரிவித்தார்.

திருவாளர்கள் வீ. ஆனந்தசங்கரி, ஸ்ரீ பாஸ்கரன், எஸ்.ஸ்ரீதரன், பி.எம் ஞானப்பிரகாசம், வி. கனகசபை ஆகியோரும் பேசினர்கள்.

## பலாலி ஆசிரிய மாணவரின் கஷ்டம்

நல்லூர், திங்கள்

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிலும் மாணவர்கள் நீர்க்கஷ்டத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு ... குறிப்பாக மாணவிகள்

## பரீட்சை……

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களையும் கலந்து ஆலோசித்து அவர்களின் கருத்தை அறிய ஆணைக்குழு ஒன்று நியமிக்க வேண்டும் என்று நாம் கோரிக்கை சமர்ப்பிக்கின்றோம். இந்த ஆணைக்குழு இப்போதைய சோதனை நடத்தும் முறையைத் திருத்துவதற்கு ஆகவேண்டிய வழிவகைகளைக் கூறும். சோதனைக்குத் தோற்றுகின்ற மாணவர்களின் தொகையோ கட்டுக்கடங்காதிருக்கின்றது. இது எமது கல்வி அமைப்பிலிருந்து எழுந்தது போலும் இதனை நுணுகி ஆராய்தல் நன்று. மாணவரின் தேர்ச்சியைமதிப்பிடுவதற்கு நவீன முறைகளைக் கையாளுதல், பல்கலைக் கழகங்களிலும் உயர்தரக் கல்வி நிலையங்களிலும் மாணவர்களைச் சேர்ப்பதற்கு உரியமுறைகளைத் தெரிதல் ஆகியவை நன்கு பரிசீலனை செய்யப்படவேண்டியவையாம்.

## ஆங்கிலத்தின் அவசியம்

ஆங்கில மொழியைக் கட்டாயபாடமாக்கி அதற்குரிய பழைய நிலையை பாடசாலைகளிலும் பல்கலைக்கழகங்களிலும் கொடுக்கக் கல்வி அமைச்சு எடுத்துவருகின்ற முயற்சிகளை நாம் வரவேற்கிறோம் ஆங்கிலக்கல்வியின் தரத்தை உயர்த்துவதற்குபெரும்முட்டுக்கட்டையாக ஆங்கில மொழியை இரண்டாவது மொழியாகப் படிப்பிக்கக் கூடிய பயிற்சிபெற்ற ஆசிரியர்கள் பற்றுக்குறை இருக்கின்றது பல்கலைக் கழகங்களில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்கின்ற மாணவரின் தொகை அருகத்தொடங்கிவிட்டது. எங்கள் பாடசாலைகளில் ஆங்கில மொழியைச் சிரத்தையுடன் கற்கும் மாணவரின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துள்ளது. இதனல் இந்தச் சிக்கல் அதிகரிக்கின்றது.

பாடசாலைகளில் மாணவர்கள் ஆங்கிலத்தை விரும்பிப் படிக்க பெரும்முயற்சி எடுக்கவேண்டும். ஆங்கில மொழியை பல்கலை கழகத்தில் பயிலும் நோக்கத்துடன் ஒரு சிறு தொகையினரை ஒவ்வொரு பாடசாலையிலும் ஆங்கிலம் பயிலச்செய்தல் நன்று.

உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார் திருமதி புனிதவதி திருச்செல்வம் மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கினார். திரு. எம் வைரமுத்து ஜே. பி. ஸ்தாபகர் நினைவுதின பேருரைநிகழ்த்தினார். விழா முடிவில் திரு. ஏ இரத்தினம் நன்றியுரை கூறினார்.

## திருடினராம்

வல்வெட்டித்துறை, திங்கள்

சிறுப்பிட்டியைச் சேர்ந்த சிறுமி ஒருத்தி தொண்டமானாற்றிலுள்ள வீடொன்றில் புகுந்து விசுவலிங்கம் மகள் புஷ்பம் என்பவருடைய ரூபா190 பெறுமதியான தங்கச்சங்கிலியை இம் மாதம் 9ந் திகதி களவாடியதாகவல்வெட்டித்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வி.ஜன ராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் எதிரியை இராட்சணிய சேனைக்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டு மேல் விசாரணையை வேறொரு திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதனால் பெரிதும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள் இவ்வித நிலைமை சில மாதங்களாக இங்கு நிலவிவருகிறது

## நாட்டிலும் நகரிலும்

அரிசி, மற்ற உணவுப் பொருட்கள், பாலுணவு முதலியவற்றில் இலங்கை தன்னிறைவு காணவேண்டும் என்ற நோக்கத்துடன் அரசாங்கம் தீவிரமான முயற்சிகள் எடுத்து வருகின்றதை எல்லோரும் அறிவீர்கள்.

தன்னிறைவு என்றால் தனக்குத் தேவைப்படும் பொருட்களைத் தானே பிறர் உதவி இல்லாமல் உற்பத்தி செய்துகொள்வதாகும். தன்னிறைவு காண்பதில் பிறர் உதவி தேவைப்பட்டால் அது சுதந்திரமான தன்னிறைவு ஆகாது.

ஆனல், நாம் இப்பொழுது நடத்திவரும் உணவுப் பெருக்க முயற்சிகள் அந்நிய நாடுகளின் உதவியில்லாமல் தான் நடக்கின்றனவா என்பதைச் சற்றே ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

முதலில் அரிசி உற்பத்தியை எடுத்துக்கொள்வோம்.

எச் போர், ஐ ஆர் 8 என்ற பல புதிய வகை நெல்வினங்களை அரசாங்கம் வெளிநாடுகளிலிருந்து வரவழைத்து அவற்றைப் பயிர் செய்தால் கூடுதலான சாகுபடி கிடைக்குமென்று கமக்காரரை ஊக்குவிக்கிறது. விளைச்சல் கூடுமென்பது உண்மையே. ஆனல் இப் பயிரினங்கள் நல்ல முறையில் விளைச்சல் கொடுப்பதற்கு அவற்றிகேற்ற அமோனியம் சல்பேட், யூறியா போன்ற செயற்கைப் பசளைகள் தேவை. இவை வெளிநாடுகளிலிருந்துதான் தருவிக்கப்பட வேண்டும். ஒரு டிராக்டரை வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்தால் அதற்குத் தேவையான உதிரிப்பாகங்களையும் வெளியிலிருந்து தான் தருவிக்கவேண்டுமல்லவா, அதுபோலத்தான்.

பயிருக்கு நோய் பிடித்துவிடுகிறது. அதற்குப் பரிகாரஞ்செய்ய வெளிநாட்டுக் கிருமிநாசினிகளே உதவிக்கு வருகின்றன.

நெல் உற்பத்தியில் இவற்றைத் தவிர ட்ராக்டர்கள் முதலிய யந்திரக் கருவிகள் உபயோகப்படுகின்றன. இவையும் இவற்றின் உதிரிப் பாகங்களும் வெளிநாட்டிலிருந்தே வரவேண்டும்.

சிறு தானியங்கள், காய்கறிகள் முதலியவற்றின் உற்பத்தியை எடுத்துக் கொண்டால் அவற்றிற்கும் வெளிநாட்டுப் பசளைகளும், கிருமிநாசினிகளும் தேவைப்படுகின்றன.

நவீன முறையில் கோழிப் பண்ணை, மாட்டுப் பண்ணை நடத்த வேண்டுமென்றாலும் இப்படியே. கோழித் தீனி, ஊசி மருந்து. ஊசி, இங்குபேட்டர்' என்ற அடைகாக்கும் யந்திரம் என்று இன்னும் எத்தனையோ உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்தே வரவேண்டும்.

வெளிநாட்டுத் தளபாடங்கள், தீனிகள், மருந்துகள் முதலியவற்றால் உற்பத்தி பெருகுகிறதென்பது கட்டாயம் நிச்சயம்.

ஆனல் இப்பொருட்களுக்கு நாம் செலவு செய்யும் அந்நிய செலாவணிக்கு ஏற்ப இங்கு உற்பத்தி பெருகியிருக்கிறதா? இந்த லாப நட்டக் கணக்கை எப்படிப் பார்ப்பது? அந்நியச் செலாவணியை ஒருவாறு கணக்கிட்டாலும், உற்பத்திப் பெருக்கத்தைக் கணக்கிடமுடியுமா?

லாபம், நட்டம் எப்படியிருந்தாலும் உணவு தன்னிறைவு காண நாம் இன்னும் வெளிநாடுகளையே நம்பியிருக்கின்றோம் என்ற உண்மையை மறுக்க முடியாது. ...வழிப்போக்கன்

## கல்வியமைச்சின் கவீப் சீட்டிழுப்பு

கொழும்பு, திங்கள்

கல்வி நூற்றாண்டு விழாவையொட்டி கல்வி கலாச்சார அமைச்சு ஒரு சுவீப் சீட்டிழுப்பை நடாத்தவிருக்கிறது.

இவ்வருடம் நவம்பரில் நடத்தப்படவிருக்கும் சீட்டிழுப்பில் ஒவ்வொரு டிக்கட்டும் 50 சதத்துக்கு விற்பனையாகும்.

முதலாவது பரிசு ஒருலட்சம் ரூபாவாகவும் இரண்டாவது பரிசு 40 ஆயிரம் ரூபாவாகவும், மூன்றாவது பரிசு 15 ஆயிரம் ரூபாவாகவும் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 200 ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.

---

## கல்விப் பகுதியின் புதிய நடவடிக்கை

சுழிபுரம், திங்கள்

கடந்த காலங்களில் இல்லாத ஓர் புதிய நடவடிக்கையை இவ்வாண்டு கல்விப் பகுதியினர் புகுத்தியுள்ளனர். டிப்புளமாப் பரீட்சை எடுக்கும் பட்டதாரிகள் இருபது ரூபா கட்டணமாக செலுத்த வேண்டும் இத்தொகை கட்டிய பரீட்சையாளர்களே பரீட்சை எடுக்கலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

## டிகோல்......

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஸ்தானம் கிடைத்துள்ளது.

நேற்றைய தேர்தலில் 57 சத வீதத்துக்குமதிகமான வாக்காளர் கலந்துகொண்டனர். இது ஒரு சாதனை எனக் கருதப்படுகிறது.

தற்போதைய பிரதமர் திரு. பொம்பாடு, முதற் சுற்றில், தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மந்திரிகள் 26 பேரில், 13 பேர் மீண்டும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கலைக்கப்பட்ட சபையின் சபாநாயகர் மீண்டும்தெரிவு செய்யப்பட்டுள்ளது, டிகோலுக்குக் கிடைத்துள்ள மற்றுமொரு பெரிய வெற்றியாகும்.

### இடதுசாரிகள் நிலை

இடதுசாரிக் கட்சிகள் சம்மேளனத்தின் தலைவர், முதலாவது சுற்றுத் தேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அவருக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. அவர் மீண்டும் அடுத்த ஞாயிறுநடக்கவிருக்கும் இரண்டாவது சுற்றுத் தேர்தலில் போட்டியிட வேண்டியுள்ளது.

இடதுசாரிக்கட்சிகள் சம்மேளனம், இதுவரை ஒரு ஸ்தானத்தையாவது பெறவில்லை, ஏழு ஸ்தானங்களை அது இழந்துள்ளது.

முன்னாள் பிரெஞ்சுப் பிரதமர் திரு. மொண்டெஸ் பிரான்ஸ், முதலாவது சுற்றுத் தேர்தலில், தமது எதிர்ப்பு அபேட்சகருக்குச் சற்றுக் குறைவான வாக்குகளே பெற்றிருப்பதாகக் கூறப்பட்டது. எப்படியிருந்தபோதும், அவரும் இரண்டாது சுற்றுத் தேர்தலில் பங்குபற்றியேயாக வேண்டும்.

### நிலைமையில் மாற்றம் ஏற்படலாம்

இம்முறைத் தேர்தலில், டிகோல் கட்சியினருக்குச் சென்ற வருடத்திலும் பார்க்க 6 சதவீதம் அதிக ஸ்தானங்கள் கிடைக்குமென 'கம்பியூட்டர்' இயந்திரம்ஒன்று கணித்துள்ளது.

ஆனாலும், தொழிற்றுறைத் தொகுதிகளிலிருந்து கிடைக்கப்பெறும் முடிவுகள், நிலைமையில் மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது.

---

## சவான் கடிதம்
### மே. வங்காள இடதுசாரிகள் கண்டனம்

கல்கத்தா, ஜூன் 24

மேற்கு வங்காள இடைத் தேர்தலுக்கான திகதிபற்றி இந்திய மத்திய அரசாங்கம். பார்லிமெண்டினாலேயே வழி காட்டப்படும் என்று மத்திய உள்நாட்டு மந்திரி திரு. சவான். சுதந்திரக் கட்சித் தலைவர் திரு. என். ஜி. ரங்காவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதை, மேற்கு வங்காள இடதுசாரி ஐக்கிய முன்னணி கண்டித்துள்ளது.

தேர்தற் திகதிகளை நிர்ணயிருக்கும் இறுதிப் பொறுப்பும், அதிகாரமும் தேர்தல் கமிஷனையே சாருமன்றி. பார்லிமெண்டை அல்ல என இடதுசாரி ஐக்கிய முன்னணி கருத்து வெளியிட்டுள்ளது.

---

## 'நால்வர் காட்டிய வழி'

சுழிபுரம், திங்கள்

"அமெரிக்க, ரஷ்ய, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஆக்க சக்திக்கு பயன்படுத்தவேண்டிய அணுவை அழிவுச் சக்திக்கு பயன் படுத்துகின்றன இதனால் அணுவை பயன்படுத்துபவர்களும் உலகும் விரைவாக அழிந்து போய்விடும். இவ்விஷயத்தில் நாம் உடனடியாக தலையிட்டு ஆக்கவேலைகள் புரிவதற்கான பணிகளைச் செய்ய வேண்டும்."

கவியோகி சுத்தானந்த பாரதியார் வட்டுக்கோட்டை கலைக்கழகத்தின் ஆதரவில் கழகத்திறந்தவெளியரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் நால்வர் காட்டிய நன்னெறிஎன்னும் பொருள் பற்றி சிறப்புரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

விழாவுக்குகலைக்கழக தலைவர் திரு. கே. கைலாயநாதன் தலைமைவகித்தார்.

கவியோகி சுத்தானந்தபாரதியார் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:—

எம்முடன்ஒன்றும் தொடர்ந்து வரமாட்டாது திருவருள் ஒன்றுமட்டுமே எம்முடன்வரும் திருவருளைப் பெறும் வழிகளையும் இறைவனையடையும் வழிகளையும் நால்வர்கள் காட்டிச் சென்றனர். நால்வர்களால் பாடப்பட்ட தேவார திருவாசகங்கள் உலகிலுள்ள எல்லோருக்கும் நன்மையளிக்கக்கூடியதாகவே பாடப்பட்டுள்ளன.

---

## பஸ் விபத்து: தபால் தாமதம்

கிளிநொச்சி, ஞாயிறு

கிளிநொச்சியிலிருந்து பூநகரி சென்ற இ. போ. ச. பஸ் வீதியை விட்டுவிலகி விபத்துக்குள்ளானதால் பூநகரியிலிருந்து கிளிநொச்சி வரும் தபாற்சேவை தடைபட்டதுடன் பூநகரியிலிருந்து பிறஇடங்களுக்குச்செல்லும் தபால்களும் ஒருநாள் தாமதமாக வேண்டிய நிலை ஏற்பட்டது.

---

## ரூபா 400 அபராதம்

குரும்பசிட்டி, திங்.

750 திரும் சட்டவிரோத கோடாவை வைத்திருந்ததாக உருப்பராயைச்சேர்ந்த மாணிக்கம் செல்லத்துரை என்பவருக்கு எதிராக சுன்னாகம்பொலிஸாரால் தொடரப்பட்டிருந்த வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மல்லாகம் மாஜிஸ்திரேட் ரூபா 400 குற்றப்பணம் செலுத்த எதிரிக்கு உத்தரவிட்டார்.

---

## 3-ந் திகதிக்கு ஒத்திவைப்பு

குரும்பசிட்டி, திங்.

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில்விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சகிகானை பிரேத ஊர்வல துப்பாக்கிப் பிரயோக வழக்கு மேல்விசாரணைக்கு அடுத்த மாதம் 3-ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.


# புதிய விதிமுறை கோழித்தீன்
## இப்பொழுது 56 இரு. கடுதாசி பைகளில்




★ உங்கள் விளைச்சலை அதிகரியுங்கள் உங்கள் லாபத்தை அதிகரியுங்கள் ★

- சுகாதாரமானது
- ✱ கலப்படம் இல்லாதது
- ✱ தொற்றுநோய் ஏற்படாது
- ✱ கையாளுவது சுலபம்
- ஒவ்வொரு தீன் வகைகளையும் இனம் கண்டுபிடிக் வசதியான வர்ணங்களில் உண்டு.

## மூஸாஜீஸ் கோழித்தீன் பாவித்து.

எமது அங்கீகாரம் பெற்ற விற்பனையாளரிடம் கிடைக்கும்.

மூஸாஜீஸ் லிமிட்டெட், அல்ஸ்டன் பிளேஸ், கொழும்பு-2, தொலைபேசி 5213. 5214.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆண்டவன் பிள்ளைகள் அனைவரும் சமம்"

### செங்குந்த இந்துக்கல்லூரியில் கவியோகி

நல்லூர், திங்கள்

"எதிர்கால உலகம் இளைஞர் கையிலே தான் இருக்கின்றது. இறைவன் ஒருவனே என்பதை ஒவ்வொருவரும் நன்கு உணரவேண்டும். ஒரே இறைவனை வெவ்வேறு பெயர்களால் நாம் அழைக்கின்றோம். அன்பு, உண்மை, தியாகம், சாந்தி போன்ற உயர்ந்த குணங்களையே எல்லாச் சமயங்களும் போதிக்கின்றன. இதை உணராமல் சிலர் வீண் சமயச் சண்டைகளில் ஈடுபட்டுழல்கின்றனர். சமயத் துவேஷத்தையும், சாதித் துவேஷத்தையும் நாம் ஒழிக்கவேண்டும். 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்பது திருமூலர் வாக்கு. ஆண்டவனின் பிள்ளைகள் அனைவரும் சமம் என்ற நல்ல கொள்கை, எல்லோருடைய உள்ளங்களிலும் ஆழப் பதியுமானால் இந்த உலகம் எவ்வளவு இன்ப மயமானதாக இருக்கும்" என யாழ்ப்பாணம் செங்குந்த இந்துக் கல்லூரிக்கு விஜயஞ்செய்த கவியோகி சுத்தானந்த பாரதியார், கல்லூரி மாணவ மாணவியர் முன் பேசுகையில் குறிப்பிட்டார்.

கவியோகியை வரவேற்றுப் பேசிய கல்லூரி அதிபர் திரு. எஸ். பி. நடராசா பேசுகையில், "பரராஜசேகரன், செகராஜசேகரன் போன்ற மன்னர்களும், நாவலர் பெருமான் போன்ற சைவத் தமிழ்த் தாதுவரும் இருந்து இலக்கியத் தொண்டும் சமயத் தொண்டும் ஆற்றிய பழம்பெரும் பதியாம் நல்லூரில் அமைந்துள்ள இக் கல்லூரியிலே கவியோகியாகிய தங்களை வரவேற்பதில் பெருமையும், பெருமகிழ்ச்சியுமடைடைறேன்" என்றார்.

துணை அதிபர் திரு. கி. கார்த்திகேசு, யோகியாரின் கல்லூரி வருகைக்கு நன்றி தெரிவித்து பேசினார்.

---

## சிவபுராண மனன எழுத்துப் போட்டி

சுழிபுரம், திங்கள்

வழக்கம்பரை சனசமூக நிலைய பஜனைச் சபையினர் சிவபுராண மனன எழுத்துப் போட்டி ஒன்றை நடத்தி முதல் மூன்று இடங்களையும் பெறுபவர்களுக்கு பரிசில் வழங்க விருக்கின்றனர்.

## கோப்பாய் ஆலய உற்சவம்

கோப்பாய், திங்கள்

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் இம் மாதம் 23-ந் திகதி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. எதிர்வரும் ஜூலை மாதம் 2-ந் திகதி அதிகாலை நடராஜர் ஆனி உத்தர தரிசன விழாவும், 3-ந் திகதி திருக்கல்யாணம் பூங்காவன விழாவும் நடைபெறும்.

---

## மண்டலசார்பற்ற மகாநாடு

பெல்கிரேட், ஜூன் 24

எதியோப்பியாவில் 1969-ல் நடைபெறவிருக்கும் மூன்றுவது மண்டல சார்பற்ற நாடுகளின் உச்சி மாநாட்டுக்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவருவதாக பெல்கிரேடில் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஆர்ஜெண்டீனு உதைபந்தாட்ட ஆட்ட முடிவில் அமளி

### 70 பேர் உயிரிழந்தனர்; 130 பேருக்குக் காயம்

பியூனஸ் அயர்ஸ், ஜூன் 24

ஆர்ஜன்டைனாவில் நடைபெற்று முடிந்த உதைபந்தாட்ட ஆட்டமொன்றைத் தொடர்ந்து ஏற்பட்ட அமளியொன்றில், 70 பேருக்கு மேல் உயிரிழந்தனர். மற்றும் 130 பேர் காயமுற்றனர்.

உதைபந்தாட்ட மைதானத்தை விட்டு, ஆட்ட முடிவில் சுமார் ஒரு லட்சம் மக்கள் வெளியேறிக் கொண்டிருந்தபோது, இந்த அமளி ஏற்பட்டது. அது ஏற்படுவதற்கான காரணம் என்னவென்பது தெளிவாகத் தெரியவில்லை.

உலகிலேயே அதிகமான உயிர்ச்சேதம் ஒரு விளையாட்டு மைதானத்தில் ஏற்பட்டது, 1964-ல் பிரேஸில் நாட்டில் ஓர் உதைபந்தாட்ட ஆட்ட முடிவில் ஏற்பட்ட அமளியில் 350 பேர் நசியுண்டு இறந்ததேயாகும்.

---

## கோரிக்கை

கோப்பாய், திங்கள்

கோப்பாய் தபால்கந்தோரை 2-ந்தரத்திலிருந்து முதல்தரத்திற்கு உயர்த்துமாறு இப்பகுதியைச்சேர்ந்த பொதுமக்கள் பலர் கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப் பிள்ளையிடம் கோரியுள்ளனர்.

## மாணவ சமுதாயம் முன்னேறிவிட்டது

கோப்பாய், திங்கள்

"கடந்த 20 ஆண்டு காலத்திற்கு முன் மாணவ சமுதாயத்தின் மனப்பான்மை, அரசாங்க உத்தியோக மோகம் நிறைந்திருந்த காரணத்தாலேயே நமது நாட்டின் பொருளாதார நிலை காலத்துக்குக் காலம் குன்றிய நிலையில் வருகின்றது."

கோப்பாய்க் கிறிஸ்தவக் கல்லூரி வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசுகையில் யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. இ. கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் திரு முருகேசம்பிள்ளை மேலும் பேசுகையில் "தற்காலத்திலே மாணவர் மத்தியில் தோன்றியுள்ள புரட்சி மனோ வைராக்கியம் விவசாயத்துறையை அதிகரித்துப் பொருளாதாரத்தை மேம்படச் செய்வதாகவுள்ளது. இந்நிலை இலங்கையின் எதிர்காலம் சுபீட்சம் நிறைந்துள்ளது என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. எனவே உடலுறுதியும், உளவுறுதியும் கொண்ட மாணவ இளைஞர்களை உருவாக்க இத்தகைய கல்லூரிகள் முன்வரவேண்டும்" என்றார்.

செல்லையா, பீற்றர், உவிற்னி, நவரத்தினராஜா ஆகிய நான்கு இல்லங்களுக்கிடையே நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டியில் செல்லையா இல்லம் முதலிடம்பெற்றது.

வெற்றி பெற்றவர்களுக்குத் திருமதி முருகேசம்பிள்ளை பரிசில்களை வழங்கினார்.





# இன்றைய விலைமதிக்கமுடியாத பரிசு: புத்தம் புதிய கார்


என்றாலும், 50 சதத்துக்கே உங்களுக்குக் கிடைக்கலாம். மேலும், பெருந்தொகையான பணத்துக்குக் காசோலையும் கிடைக்கும்!

தேசிய லொத்தர் டிக்கெற் வாங்கினால் மட்டும் இது உங்களுக்குக் கிடைக்கும். ஆம், நீங்களும் புத்தம் புதிய கார் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

சீட்டிழுப்பு இல. 200. தேதி: 27-6-68-
புத்தம் புதிய ரெனோல்ட் 16 லுக்ஸ் கார்
ரூபா 23,750/- *



சீட்டிழுப்பு இல. 201. தேதி: 4-7-68-
புத்தம் புதிய வக்ஷோல் வைவா கார்
ரூபா 17,000/-*



* இவை தீர்வை உட்பட்ட கம்பெனி பட்டியல் விலைகளாகும்.

இந்தக் கார்களை வாங்குவதற்கான சந்தர்ப்பம் சீட்டிழுப்புக்குப்பின் 14 நாட்கள்வரை மட்டுமேவழங்கப்படும்.

இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெற் வாங்குங்கள்!

AJNS.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வடபகுதி பொலிஸ் அதிபர் ஐ. ஜி. பி.யை சந்திப்பார்

யாழ்ப்பாணம், திங். மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசம் சம்பந்தமாக பொலிசாரின் நிலைமை என்ன என்பதை விளக்கமாகத் தெரிவித்துக் கொள்வதற்கு ஐ. ஜி. பி. திரு. அலெரிக் அபயகுணவர்த்தனவை சந்தித்துப் பேசுவதற்கு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்று மாலை கொழும்புக்குப் பிரயாணமானார்.

சமூக ஏற்றத்தாழ்வு ஒழிப்பு சட்டத்தை அமுல் நடாத்துவதும் நாட்டின் அமைதியைப் பாதுகாப்பதும் மாவிட்டபுர ஆலயம் சம்பந்தமாக பொலிசாருக்கு உள்ள கடமை என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

---


## அரசாங்கத்திடம் ஒப்படைக்கமுடிவு

கொழும்பு, திங். அரசாங்கம் பொறுப்பேற்காத ரோமன் கத்தோலிக்க பாடசாலைகளை அடுத்த மாதம் முதல் அரசாங்கத்திடம் ஒப்படைக்க முகாமையாளர்கள் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது.

---


## வின்ஸர் வெண்திரையில்

இப்பொழுது திரையிடப்படுகிறது!



* முத்துராமன் * உதயசந்திரிகா
தங்கவேலு, சுப்பையா, சுந்தரராஜன்
நடித்த


# ராஜாத்தி

பழமையும் புதுமையும் கலந்து திறமைமிகு டைரக்ஷனில் உருவான வெற்றிச் சித்திரம்.



| இங்ஸ்லி | பிளாசா | லைலன் |
|---|---|---|
| வெலிங்டன் [யாழ்ப்பாணம்] | விஜயா [மட்டக்களப்பு] | ராஜ் [நீர்கொழும்பு] |
| ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [அட்டன்] | அயன் [மன்னார்] |

★ ஜெமினி கணேசன்
★ கே. ஆர். விஜயா
நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ் ராமு


லண்டனில்

## ஆபிரிக்கர் ஆர்ப்பாட்டம்

லண்டன், ஜூன் 24
நைஜீரியாவுக்கு பிரிட்டன் ஆயுதங்கள் விநியோகிப்பதை எதிர்த்து, லண்டனில் 1000 ஆபிரிக்கர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

ஆர்ப்பாட்டக்காரர் பிரிட்டிஷ் பிரதமரின் வாசஸ்தலத்தை நோக்கிச் சென்றபோது, பொலிசாரால் தடைசெய்யப்பட்டனர்.

---

## எரிந்து மரணம்

யாழ்ப்பாணம், திங். மயிலிட்டியில் வர்த்தலை விளானைச்சேர்ந்த கந்தன் வல்லி எனும் வயோதிபர் நித்திரை செய்துகொண்டிருந்தசமயத்தில் அவரதுபக்கத்திலிருந்தபோத்தல்விளக்கிலிருந்து தீபற்றிக்கொண்டதால் ஏற்பட்ட எரிகாயங்களுக்குள்ளாகி மரணமானார். போத்தல் விளக்கிலிருந்து தீபரவி இவர் நித்திரை செய்துகொண்டிருந்த குடிசையும் எரிந்து சேதத்துக்குள்ளாகியது.

திடீர் மரண விசாரணை நடத்திய காங்கேசன்துறை திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. அ. குமரகுரு விபத்து மரணம் என்று தீர்ப்பளித்தார்.

---

## கிளிநொச்சிஎம்.பி ஆரம்பிப்பார்

கிளிநொச்சி, செவ். மல்லாவி உபதபாற்கந்தோரும் ஸ்கந்தபுரம் உபதபாற் கந்தோரும் அடுத்த மாதம் முதல் திகதியிலிருந்து புதிய உபதபால் அதிபர்களின் கீழ் செயல்படவிருக்கின்றது இந்தஆரம்ப வைபவத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ இரத்தினம் கலந்துகொண்டு தொடக்கி வைப்பார். இவ் வைபவத்தில் வடமாநில தபால் அத்தியட்சகர் திரு. தருமலிங்கம் வரைச்சிக் காரியாதிகாரி திரு. யோகநாதன் ஆகியோரும் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.


4வது வாரம்!
ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில் 4 காட்சி
ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா நடிக்கும்
முகூர்த்தநாள்



ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெய்சங்கர்
விஜயலட்சுமி
நடித்த
பவானி



MANOHARA
JAFFNA
Daily at 4-45,
7-00 & 9-45 P. m.
John Wayne
In
ELDORADO
Color



REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 P. M.
Richard Johnson &
Elke Sommer
in
DEADLIER THAN
THE MALE
[Adults Only]
no passes & no concession.


மாநகரசபை தேர்தல்

# தெகிவளை, கல்கிசை கூட்டாட்சி கட்சிகள்வசம்

கொழும்பு, திங்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் கீழ் இருந்த தெஹிவளை - கல்கிசை நகரசபையை கூட்டரசாங்கக் கட்சியினர் கைப்பற்றியுள்ளனர். வட்டாரப் பிரிவினை செய்யப்பட்ட பின்னர் நேற்று நடந்த தேர்தலில், கூட்டரசாங்க கட்சியினர் 21 வட்டாரங்களையும் ஐக்கிய தேசியக் கட்சியினர் 8 வட்டாரங்களிலும் வெற்றிபெற்றனர்.

1ம் வட்டாரம்:-- கே. ஏ. பி. அல்பர்ட் [சுதந்திரா] 1293, சாந்திர பெரேரா [யூ. என். பி.] 768.

2ம் வட்டாரம்:- எல். எச். பீட்டர் பெரேரா [யூ. என் பி.] 977, அல்பேர்ட் பெரேரா [சுதந்திரா] 701,

3ம் வட்டாரம்:-- மேயர் எஸ். டி. ஜெயசிங்கா [யூ. என். பி] 1231, டபிள்யூ. எல்வின் டி சொய்ஸா [சுதந்திரா] 904.

4ம் வட்டாரம்:- எல். டி. அல்பேர்ட் பெரேரா [சுதந்திரா] 1065, டி. எஸ், செனிவரத்ன [யூ. என், பி.] 604,

5ம் வட்டாரம்;- தன பாலா வீரசேகரா [சமசமாஜ] 1169, லயனல் பெரேரா [யூ. என். பி.]885

6ம் வட்டாரம்;-- என். எஸ். சொய்ஸா [சுதந்திரா] 968, ஜிராணஸ் [யூ. என். பி.] 825, சில்வா (சுயேட்சை) 69.

7ம் வட்டாரம்:- டி. கரான் [யூ. என். பி.]946, சி. மிலா (சமசமாஜ) 743.

8ம் வட்டாரம்:- ரொய் பெர்ணான்டோ [யூ. என். பி.] 1083, வண்டேவார்ட் (சமசமாஜ] 448,

9ம் வட்டாரம்:- ஜே, பி. பீரிஸ் [சுதந்திரா]663, எல். டபிள்யூ. இன்டேசியா [யூ. என். பி.] 549, கருணபால அபயவிக்ரமா [சுயேட்சை] 175, இ. யே. கே. பெரேரா (சுயேட்சை) 98, எல். விக்டர் பெரேரா[சுயேட்சை]6'

10ம் வட்டாரம்:-- கே. சேனநாயக்கா (சுதந்திரா] 1401, டி, ஏ. ஜெயதுங்கா (யூ. என். பி,] 566.

11ம் வட்டாரம்:- டபிள்யூ பி. குலசிங்கா (சமசமாஜ] 1343, சிறிபால கருணாசேன [யூ. என், பி.] 968,

12ம் வட்டாரம்:- எல். டி. குணரத்ன [சுதந்திரா] 896. டபிள்யூ. ஜெயதிலகா (யூ. என். பி,) 526,

13ம் வட்டாரம்:—- பெரேரா (யூ, என், பி,)991. டி, டபிள்யூ. சூரவீர [கம்யூனிஸ்ட்] 933,

14ம் வட்டாரம்:- அன்ரு பெர்ணாண்டோ (சுதந்திரா) 1096, ஐ, எஸ், பப்ரிஸ்ற் [யூ, என், பி,] 943,

15ம் வட்டாரம்:- ஐ. பி. பெரேரா (சுதந்திரா) 908, டி, ஜெயவர்த்தன (யு, என், பி,] 564 அமிரா விஜயரத்ன (சுயேட்சை]113. செனிவரத்ன [சுயேட்சை]79,

16 வட்டாரம்:- சரண சிறிபெரரா (சமசமாஜ) 1026, பெர்ணான்டோ [யூ, என், பி,]993

17ம் வட்டாரம்:- திருமதி ஆர், டி. குணவர்த்தன[சுதந்திரா)703, அபயவிக்ரம [யூ, என், பி,) 393, பெர்ணான்டோ (சுயேட்சை)261, கொலின் பெரேரா [சுயேட்சை] 181,

18ம் வட்டாரம்:-ரீ, எஸ், கொலோன்[யூ, என், பி,] 936 ரணக்கா [சமசமாஜ]722,

19ம் வட்டாரம்:—- பியதாசா பொன்சேகா [சமசமாஜ) 1365, ஏ, பி, டி, அல்விஸ் [யூ. என், பி,) 907,

20-ம் வட்டாரம்- டி. வால்டர் கைலோன் (சுதந்திரா] 700 சில்வா [யூ. என். பி] 465.

21-ம் வட்டாரம்: ஏ. லியானகே [சமசமாஜ] 873 டக்ளஸ் [யூ. என். பி] 437.

22-ம் வட்டாரம்- விஜய ஸ்ரீவர்த்தன [யூ. என். பி] 917, அல்விஸ் [சமசமாஜ] 792.

23-ம் வட்டாரம்— சந்திர குணசேகரா [சமசமாஜ] 1261, செனிவரத்தின [யூ. என். பி] 950.

24-ம் வட்டாரம்: பெர்ணான்டோ [யூ என் பி]921, சில்வா [கம்யூனிஸ்ட்] 908, பொன்சேகா [சுயேச்சை 92.

25-ம் வட்டாரம்: விக்டர் பெர்ணான்டோ [சுதந்

(5-ம் பக்கம் பார்க்க]


இறைவன் திருமேனியில்
## சந்தனக் காப்பிட்டு
அலங்கரிக்க மிகவும் உகந்த
# பச்சை சந்தனம்
உடனுக்குடன் அரைத்துக் கொடுக்கிறோம்.
என்றும் எங்களிடம் கிடைக்கும்
சுந்தரம் பிரதர்ஸ்
கோவில் அபிஷேகப் பொருட்கள்
மருந்துச்சரக்கு விற்பனையாளர்
73, மின்சா, நிலையவீதி, யாழ்ப்பாணம்.

மட்டக்களப்பு ஆனைப்பந்தி
பிள்ளையார் கோவில்
பிரம்ம ஸ்ரீ வி. வரதராசக் குருக்கள்
எழுதுவது:

அன்புடையீர்,
நீங்கள் அனுப்பி வைக்கும் பச்சைச் சந்தனம் சுத்தமானதாகவும் நறுமணமுள்ளதாகவும், தூய்மையாகவும் இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஆனைப்பந்தி பிள்ளையாருக்குச் சந்தனக்காப்புச் சாத்தி பணிந்து அருள் பெறுகிறார்கள் அடியார்கள். உங்கள் சேவை தொடர்ந்து நடந்துவர வேண்டுமென்று எல்லாம் வல்ல சித்தி விக்னேஸ்வரனை வேண்டுகிறேன்.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org